
## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 87

**ஆதியாகமத்தின் இடங்கள்-விடுகதையில்**



Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. ஐந்தாகமத்தின் முதல் நூல்; வேதத்தின் அடிப்படை நூல்; தெரிந்தெடுத்த சந்ததி பற்றிய நூல்; இதன் மொத்த அதிகாரங்கள் ............... (4)
3. தீர்க்கதரிசி என வேதத்தில் அறியப்பட்டேன். என் முதல் மகனைப் பெற்றபோது என் வயது என்ன? (6)
4. ஆண்டவர் என்னோடு விருத்தசேதன உடன்படிக்கை செய்தபோது என் மனைவியின் வயது (4)
6. எத்தன் எனப்பட்ட நான் மாமனின் மந்தைக்காக சேவித்த ஆண்டு. (2)
7. மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் குணலட்சணங்களைப் பெற்றேன்; முதல் நூலின் கடைசி பகுதிகளில் நானே நாயகன்; என் ஆயுசு ஆண்டுகாலம் எவ்வளவு (7) கடைசி மூன்று எழுத்துக்கள் →
8. சகோதரனை சாந்தப்படுத்த வெகுமதியாக பல உயிர் பொருட்கள் அனுப்பினேன். அதில் எத்தனை கடாரிகள் அடக்கம்? (4)
9. ஏமோரின் புத்திரர் கையில் ஏல் எல்லோகே இஸ்ரவேல் என்ற பலிபீடம் கட்ட நிலத்திற்கு ......................... வெள்ளிக்காசு கொடுக்கப்பட்டது. (2)

→→→

1. எனக்கு பதினோரு சகோதரர்கள் உண்டு. பார்வோனுக்கு முன் ................. பேரை நிறுத்தினேன். (3)
4. பழைய ஏற்பாட்டு நூல்களின் அதிகாரங்களின் கூட்டுத் தொகை + ஒன்று = ஆதிமனிதனின் வயது. (10) கடைசி 4 எழுத்துக்கள் ↓
5. ஏமாற்றியவன் ஏமாறியவனை ............. தரைமட்டும் குனிந்து வணங்கினான். (4)
7. கர்த்தருக்கு செவிமடுத்து ஈசாக்கு பஞ்சகாலத்தில் விதைத்த போது எத்தனை மடங்கு பலன் அடைந்தான்? (2)

– தொடர்ச்சி 5 –ம் பக்கம்

Private Circulation only கரிகாலன், திருச்சி – 8. போன் : 2708110

SSA
# ஆரோனின் துளிர்த்த கோல்
வேதம் அறிவோம், தேவர்களாவோம்
THE SPROUTED STAFF OF AARON
மாத இதழ் : நவம்பர் 2019

**ஆதியாகமம் 50 : 25a**

**யோசேப்பு : தேவன் உங்களை சந்திக்கும் போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக.**

★★★★★

## அம்மா! உன் விசுவாசம் பெரிது. மத். 15:28

கானானிய பெண்ணொருத்தி கண்டாள் இயேசுவை
தீரு சீதோன் பட்டணத் திசைகளிலே
ஓடினாள் ஆண்டவரிடம் வேண்டினாள் மகளுக்காய்
அசுத்த ஆவியை அகற்ற வேண்டுமென
அவரது மௌனம் அவள் உள்ளத்தை நொறுக்க - பின்னர்
'பிள்ளைகளின் அப்பம் நாய்க்குட்டிக்கன்று' என்ற
பதிலும் அவளின் கண்ணீரைப் பெருக்க
விடுவாளோ அவளும் தன் விடாப்பிடி விசுவாசத்தை?
பக்குவமான பதிலை பட்டென உரைத்தாள்
'கீழே விழும் துணிக்கையைத் தின்னுமே நாய்க்குட்டி'
உடும்புப்பிடி விசுவாசமும் உன்னதரின் உள்ளத்தை உருக்க
நறுக்கென ஒரு நற்சான்று 'அம்மா! உன் விசுவாசம் பெரிது'
நலம் பெற்ற மகளும் விசுவாசித்த தாயும் துதித்தனர் இயேசுவை
நாமும் விசுவாசத்தில் வளர நம் நாயகனிடம் ஜெபிப்போம்.

**D. சுதந்திரதேவி,** ஈச்சம்பட்டி

**அன்புடையீர், வணக்கம்.**

## உன் வாய், என் வார்த்தைகள்

”ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன், சிறுபிள்ளையாயிருக்கிறேன்” என்று சொன்ன எரேமியாவுக்கு, கர்த்தர், ”நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்கு கட்டளையிடுகிறவை - களெல்லாம் நீ பேசுவாயாக....இதோ, என் வார்த்தைகளை உன் வாயில் வைக்கிறேன்” என்று மறுமொழி அளித்தார் (எரே.1:6-9). யோசனையில் பெரியவரும் செயலில் வல்லமையானவருமான மகாதேவனானவர் நம் வாயைப் பயன்படுத்தி தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற நிர்ணயித்திருக்கிறார் (எரே. 32:19).

அநேகர் கடிந்துகொண்டு பேசும் வார்த்தைகளை கடுகளவும் ஏற்றுக் கொள்வதில்லை. பரிசுத்தம் பண்ணப்பட்டு ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக நியமிக்கப்பட்ட எரேமியா இருபத்து மூன்று வருஷமாக தீர்க்கதரிசனம் உரைத்தும், போதித்தும், புத்தகச்சுருளாக எழுதிய தேவனின் வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர்கள் கேளாமற் போனார்கள், செவி சாய்க்கவேயில்லை. அதின் விளைவாக மரநுகத்திற்கு பதிலாக இருப்பு நுகத்தை தேவன் கட்டளையிடவேண்டிய பரிதாபமான புலம்பும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் (எரே. 28:10,13). தேவனுடைய வார்த்தைகளுக்கு செவிமடுக்க கவனமாயிருப்போம்.

நம்முடைய வாயிலிருந்து தேவனின் வார்த்தைகள் வெளிவர பரமகுயவனின் கைகளில் நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம். நம் வாயிலிருந்து கிருபைப் பொருந்திய சாரமுள்ள வார்த்தைகள் புறப்பட வேண்டும். தொய்ந்துப்போன ஆத்துமாக்களை தட்டியெழுப்பி தூக்கிவிடும் உற்சாகமுள்ள வார்த்தைகளைச் சொல்லவேண்டும். நம்பிக்கையிழந் - தோருக்கு நம்பிக்கை ஒளியை கொடுக்கக்கூடிய உயிர்ப்பிக்கும் வார்த்தைகளைப் பேசவும், பக்தி விருத்திக்கேதுவான வாக்குகளை பேசவும், புத்தி சொல்ல வேண்டிய சூழலில் தயங்காமல் ஆண்டவரின் ஒத்தாசையுடன் கடிந்துரைத்தும் செயல்படுவோம்.

கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து, உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1 பேது. 3:15). நற்செய்தியைப் புறஜாதி -களுக்கு கொண்டு சொல்லும் புதிய பார்வையில் கவனமாய் பகருவோம்.

பவுல் அடிகளாரும், ”நான் சுவிசேஷத்தைப்பற்றி பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கும் வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள் என்றார் (எபே. 6:19,20). நம்முடைய வாய் கர்த்தரை அறிந்துணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைப்பாராட்டட்டும் (எரே. 9:23, 24). தேவன் நமக்குத் தந்த வாயில் அவருடைய வார்த்தை தைரியமாய் வெளிவர நம்மை அவர் கரத்தில் இன்று ஒப்புக்கொடுப்போம். ஆமென்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



## கடந்த மாத வேதவினா போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** 1. சாரா லின்சி கோல்டு, 2. பிரியா ஜெனிட்டா, 3. ஹெப்சி பானுமதி

**II.** 1. பியூலா அன்புமலர், 2. A.V. வர்ஜினியா, 3. ஸ்டாலின் மல்லிகா

**I&II.** 1. P.D.கமலம் **I & III.** 1. ஜெயசீலி ஜெயராஜ், 2. ஷீபா

**II & III.** 1. லதா வேதகுமாரி, 2. சுதா மனோகரன், 3. S. ஜெனிட்டா, 4. சுதந்திரதேவி, 5. ஜாய்ஸ் மணிமொழி, 6. G.T. ஜுலி, 7. வைலட் சாமிக்கண்ணு, 8. J. ஏஞ்சலினா, 9. நகோமி சாம்சன், 10. சின்னம்மாள் மேரி, 11. அன்னமேரி ராஜ், 12. சுதந்திரதேவி, 13. ரேவதி ஜெயசிங், 14. சுகந்தி ஜோன்ஸ், 15. லிடியா ஜெயசீலன், 16. I.டெய்சி, 17. காந்தா மனோகரன், 18. ஏஞ்சலின் சிந்தியா, 19. கிரேசி பிரான்சிஸ், 20. தேவதாஸ் செல்வக்குமார், 21. ஜோன்பொன்முடி, 22. S. செல்வமணி, 23. S. தனபாக்கியம், 24. லிடியா எபநேசர், 25. ஜாய்ஸ் சுசீலாதேவி

**III.** 1. எஸ்தர் ஜெபராஜ், 2. பியூலா காந்தி, 3. ஜெயசீலி செல்லையா, 4. குணதிலகா யோனத்தான், 5. ஜெபவதி ராயப்பன், 6. கனகா ஜார்ஜ், 7. சித்ரா பாபு, 8. ரெபேக்காள், 9. ஷீலா ஜான்சன், 10. மாலாகிறிஸ்டி நெப்போலியன், 11. ராணி தனராஜ், 12. M. பத்மாவதி, 13. M. எலிசபெத் ராணி, 14. ஹேமலதா ஜெயசந்தர், 15. குளோரி

**I, II & III:** 1. ஜுலியா சார்லி, 2. ரூபி காட்பிரே, 3. ஜாய் ஜோசப், 4. ரூபல்லா அற்புதராஜ், 5. ரெஜினாமேரி மனோகரன், 6. சூசன் மித்ரா, 7. மல்லிகா எட்வின், 8. எமல்டா சுந்தர்சிங், 9. H. சிநேகா, 10. எஸ்தர் ராஜேந்திரன் 11. ராணி சாந்தகுமார், 12. ருவல்யா அருள்பிரகாசம், 13. ஆலிஸ் ஜோசியா, 14. நலந்தா டேவிட், 15. T. சுகந்தா ரோப்பா கிறிஸ்டல், 16. பாலின் மார்டீன், 17. சாந்தி வில்லியம், 18. D. அன்புக்கமலம், 19. ரபேக்கா ஐசக், 20. பிரேமலதா தியாகராஜன், 21. பியூலா நவமணி, 22. ஜோசப் அதிசயம், 23. திலகவதி அதிசயம், 24. கிரேஸ் பிராங்களின், 25. ஜெயசீலி பால்ராஜ், 26. ஷாலினி இம்மானுவேல், 27. ஜெபசீலி ரவிச்சந்திரன், 28. ஹெலன் சேசுராஜ், 29. நிர்மலா டேவிட், 30. மனோகரி பெஞ்சமின், 31. ஜாகுலின் உஷா, 32. ரீட்டா ரோசலிண்ட், 33. மோனிகாள் காந்திநாத், 34. சாந்தி ஜோயல், 35. மார்கிரேட் எலிசபெத், 36. மல்லிகா ஜாய்ஸ், 37. மீரா பாண்டியன், 38. மீரா பாண்டியன், 39. ஆனி கில்சன், 40. ரோஸ்லின் திலகவதி, 41. ஜேனட் குணா, 42. சலோமி எட்வின், 43. கமலா ஜார்ஜ், 44. வினோத்பால், 45. ரூபி அகஸ்டின், 46. கீத்தா கிறிஸ்டோபர், 47. M. எலிசபெத், 48. கலாவதி தயாளகரன், 49. சந்திரா இம்மானுவேல், 50. தேவகிருபா, 51. ஜாஸ்மின் உஷாராணி, 52. மெர்ஸி இன்பராஜ், 53. ஜுலா கிரேஸ், 54. ஹெப்சி அசரிய, 55. ஆஸ்டின் ஸ்மித், 56. ஆஸ்பி வியாகுலின், 57. மரிய புஷ்பம், 58. சம்பத் இளங்கோவன், 59. நான்சி தெபோராள், 60. T. சுகுணா எலிசபெத், 61. செலைன் ராணி டேவிட், 62. வித்யா வில்சன், 63. பாக்கியராணி, 64. R. விமலா ஆனந்ததாஸ், 65. கிறிஸ்டபல் நிர்மலா

## SSA - 19 திருச்சியில் வேதகாமப் போட்டி நடைபெறும் இடங்கள்

1. **தூய பவுல் ஆலயம்,** உறையூர்
2. **கிறிஸ்து ஆலயம்,** தெப்பக்குளம்
3. **எழுப்புதல் துதி ஆலயம்,** புத்தூர்
4. **பெத்லகேம் ஆலயம்,** கிராப்பட்டி
5. **தூய அந்திரேயா ஆலயம்,** எல்.ஐ.சி. காலனி
6. **பிதெல்பியா சபை,** சுப்ரமணியபுரம்
7. **பிதெல்பியா சபை,** திருவெறும்பூர்
8. **PCA சபை,** விமானநிலையம்
9. **தூய யோவான் ஆலயம்,** சுப்ரமணியபுரம்
10. **சகல பரிசுத்த ஆலயம்,** புத்தூர்

# அர்த்தம் அறிவோம் : ஆதியாகமம்

அபிமலேக்கு – ராஜாவின் தகப்பன்
அமலேக்கியர் – சமபூமிவாசி
அம்மோனியர் – என் நாட்டவன்
அரராத் – பரிசுத்த பூமி
ஆதாம் – செம்மண்
உன்னதமான தேவன் – ஏலியோன்
காண்கிற கர்த்தர் – ஏல்ரோயீ
ஆபேல் – நிலையில்லாமை / சுவாசம்
சர்வ வல்லமையான தேவன் – ஏல்ஷடாய்
ஆபிரகாம் – திரளான மக்களின் தந்தை
சர்வலோக நியாயதிபதி – யெகோவா சிட்கீனு
ஆகார் – அலைந்து திரிதல்
கர்த்தருடைய பர்வத்தில் பார்த்துக்
கொள்ளப்படும் – யெகோவாயீரே
ஆசேர் – பாக்கியவான்
ஆரான் – மலைவாசி
இசக்கார் – கூலி வேலை செய்பவன்
இஸ்ரவேல் – கர்த்தர் போராடுகிறார்
இஸ்மவேல் – தேவன் கேட்கிறார்.
இதக்கேல் – வேகமான
ஈசாக்கு – நகைப்பு
எபிரோன் – உடன்படிக்கை
எப்பிராயீம் – செழிப்பான
எப்பிராத்தா – செழிப்பு
ஏதேன் – மகிழ்ச்சி
ஏசா – ரோமம் நிறைந்தவர்
ஏவாள் – உயிருள்ள யாவருக்கும் தாய்
ஏனோஸ் – அழிவுள்ள
ஏனோக்கு – கற்பித்தல், ஆசிரியர்
துபாசி – மொழி பெயர்ப்பாளர்
காத் – சேனை
சாராள் – உலகத்தின் அரசி
சவுல் – கேட்கப்பட்டது
கானான் – தாழ்மையான
சம்மா – புகழ்ச்சி
சர்வ சிருஷ்டிகர் – ஏலோஹீம்

சவுல் – கேட்கப்பட்டது
சாலேம் – சமாதானம்
கீலேயாத் – பெலமான இடம்
கீகோன் – நீரோடை
சிமியோன் – கேட்குதல்
சீகேம் – தோள்
சீதோன் – கோட்டை
சீரியா – பீடபூமி
செபுலோன் – குடியிருப்பு
சேத் – பதிலாக கொடுக்கப்பட்டது
சோவார் – சிறியது
தாண் – நியாயதிபதி
தாமார் – பனைமரம்
தீனாள் – நியாயத்தீர்ப்பு
தெபொராள் – தேனீ
நிம்ரோத் – பராக்கிரமசாலி
நோவா – தேற்றுகிறவர் / ஓய்வு
பாயேல் – தாறுமாறு
பாரான் –குகைகள் நிறைந்த
பாரேஸ் – மீறி வருதல்
பெத்துவேல் – கர்த்தரில் வசிப்போன்
பெத்தேல் – தேவனுடைய வீடு
பெத்லகேம் – அப்பத்தின் வீடு
பெயெர்செபா – ஆணையின் கிணறு
பெனியேல் – தேவனுடைய முகம்
பென்யமீன் – வலதுகரத்தின் மகன்
மக்பேலா – இரட்டை குகைகள்
மக்னாயீம் – இரண்டு கூட்டம்
மம்ரே – கொழுப்பு
மனாசே – மறக்கப்பண்ணி
மெல்கிசேதேக்கு – நீதியான அரசர்
யாக்கோபு – ஏமாற்றுகிறவர் எத்தன்
யோசேப்பு – பெருகச் செய்கிறவர்
யூதா –புகழ்ச்சி
ரெபெக்காள் – முகபுகழ்ச்சி செய்தல்
லோத்து – மறைக்கப்பட்டவர்

பரிசு பெறுபவர்கள் :
1. திருமதி. **T. சுகந்தா** புதுக்கோட்டை, 2. திருமதி. **ஹெப்சி அசரியா** பாண்டிச்சேரி





**ஆதியாகமம் 6-ம் அதிகாரம் தொடர்கிறது.**

மனிதனின் பாவம் படிப்படியாக பெருகியதை 3-ம் அதிகாரத்திலிருந்தே காணலாம். ஆதாம் கனியை புசிக்க வேண்டாம் என தேவன் சொல்லியிருந்த போதும் தேவனை நேசிப்பதைவிட மனைவியை நேசித்ததால், உண்பது தவறு என அறிந்திருந்தும், விளைவு என்ன என தெரிந்திருந்தும் அதை புசித்தார். காயீன் எச்சரிக்கப்பட்ட பின்பும் சகோதரனை கொலை செய்து குற்றததை ஏற்க மறுத்து, பொய் சொல்லி, தேவனையே கேள்வி கேட்கிறார். மனந்திரும்பாமல் தனக்கான பாதுகாப்புக்காக மட்டும் தேவனை நாடினார். இரு மனைவியை மணந்த லாமேக்கு கொலை செய்தது மட்டுமல்ல; அதைக் குறிதது பெருமை பாராட்டுகிறார். இறுதியாக மனிதனின் பாவம் தெய்வ அமைப்பையும் சீர்க்குலைக்க ஆரம்பித்தது.

மனிதர்கள் மனம் மாறுவார்கள் என தேவன் நீண்ட ஆயுளைக் கொடுத்து பொறுமையோடு காத்திருந்தார். பாவத்தின் பெருக்கம் மட்டுமே நிகழ்ந்ததால், அவனது பாவத்தைக் குறைக்க அவனது ஆயுளை 120 ஆண்டுகள் என குறைத்தார். பாவத்தை வேரோடு மாய்க்க வெள்ளப்பெருக்கால் உலகை அழிக்க திட்டமிட்டார். நீதிமானாய் தான் கண்ட நோவாவை காக்கிறார்.

நோவா செய்த பேழையின் அகலத்தை விட நீளம் ஆறு மடங்கு அதிகமாயிருந்தது. (**450’** நீளம், **75’** அகலம், **45’** உயரம்) இன்றளவும் இந்த விகிதத்தின்படிதான் கப்பல்கள் கட்டப்படுகின்றன. **i)** இந்த பேழை எந்த நீர்நிலையும் அருகில் இல்லாத சூழலில் **ii)** அவிசுவாசிகளால் கட்டப்பட்டது. ஒவ்வொரு நாளும் நோவா ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொரு நாளும் அழிவைக் குறித்த நியாயத் தீர்ப்பையும் நீதியையும் பிரசங்கித்து (2 பேது 2:5) 120 ஆண்டுகள் பேழையைக் கட்டினார். இவ்விதம் நோவாவின் கீழ்ப்படிதலின் ஆண்டுகளே மனிதனின் ஆயுட் நாட்களாயின. நோவா, தற்காலத்திலே காணாததவைகளைக் குறித்து தேவ எச்சரிப்பைப் பெற்று பயபக்தியுள்ளவனானான் என எபிரேய ஆசிரியர் குறிப்பிடுகிறார். (எபி. 11:7) இவ்விதம் நோவா காணாதிருந்தும் விசுவாசித்த நீதிமான் மட்டுமல்ல; பாக்யவானும்கூட ஆவார். (யோ. 20:29)

நோவா பெருவெள்ளத்திற்கு காக்கப்பட்ட நிகழ்வு, **a)** கீழ்ப்படிந்து இறைவனின் பிள்ளைகளாய் வாழ்பவர்கள் தேவ கோபாக்கினைக்கு நீங்கலாக்கப்படுவார்கள் என்பதற்கும் (ரோ.5:9), **b)** விசுவாசித்தினாலுண்டாகும் நீதிக்கு சுதந்திரவாளியாவார் (எபி. 11:7) என்பதற்கும் முன்னடையாளமாயிருக்கிறார். மேலும் நோவாவின் பேழை காக்கப்படுதல் கடவுளின் ஞானஸ்நானத்திற்கு ஒப்புமையாக இருக்கிறது. (1யேது 3:20,21)

நோவாவின் கீழ்ப்படிதலினால் 1) அவரது குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் 2) உலகின் நீர்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் தவிர அனைத்து ஜீவராசி வகைகளும் உயிர்தப்பின.

**7-ம் அதிகாரம் :** மிருகங்களின் எண்ணிக்கைப் பற்றி இரு வேறுபட்ட மரபுசார் கருத்துக்கள் உள்ளன. சுத்தமில்லாத மிருகங்கள் புவியின் இயற்கை வளத்தை பேணும் சுழற்சியில் ஈடுபடவும், இனவிருத்தி செய்யவும், சுத்தமான மிருகங்கள் பலிசெலுத்தவும் காக்கப்பட்டன. எப்படி அனைத்து விலங்கினங்களும் பேழைக்குள் ஒருசேர பிரவேசித்தன? நோவா கீழ்ப்படிதலுடன் பேழைகட்டும் பங்கை நேர்த்தியாய் செய்தபோது தேவன் மிருகங்களைக் கூட்டிச் சேர்க்கும் தன் பங்கை ஆற்றியிருக்கிறார்.

மழை பெருவெள்ளத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பு அனைத்தும் பேழைக்குள் பிரவேசித்தன. கர்த்தர் கதவை அடைத்தார். கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கும் எவனும் பரலோகத்தினுள்ளே சேர்க்கப்பட்டு, மற்றவர்கள் வெளியே விடப்படுவார்கள்; கதவு அடைக்கப்படும். இதற்கு இடையேயான நிலை எதுவும் இல்லை. (மத். 25:10, 11)

நோவா பேழைக்குள் மொத்தம் ஒரு ஆண்டு 17 நாட்கள் இருந்தார். ஆதாம் படைக்கப்பட்டு 1656 ஆண்டுகளுக்குப்பின் பெருவெள்ளம் ஏற்பட்டது. பெருவெள்ளம் முழு உலகத்திலுமா? அல்லது குறிப்பிட்ட இடத்தில் மட்டுமா? என்பது பலரது கேள்வி. 1) பலதரப்பட்ட கலாச்சார சமூகத்திலும் பழங்கால வெள்ளம் பற்றிய பதிவுகள் உள்ளன. 2) முழு உலகத்தின் துன்மார்க்கரை அழிக்க ஏற்பட்ட வெள்ளம் உலகளவில் ஏற்பட்டிருக்க வேண்டும். 3) வெள்ளம் ஏற்பட்டதற்கான சான்று மலையுச்சி பகுதிகளில் காணப்படும் கடல்வாழ் உயிரினங்களின் படிமங்கள் முக்கியமானதாகும்.

மிக உயரமான மலைகள் வெள்ளத்தில் அமிழ்ந்து காணப்பட்டுள்ளன. அவற்றிற்கு மேலாக 22 அடி உயர வெள்ளம் இருந்தது. 45 அடி உயரம் உள்ள பேழை கீழே தரைதட்டாமல் மிதந்தது வெள்ளத்தின் பரிமாணத்தைக் காட்டுகிறது. 150 நாள் ஜலம் பிரவாகித்தது என்பது 40 நாள் பெருமழையை உள்ளிட்ட நாட்களாகும்; இதில் 110 நாட்கள் பேழை அமைதியான நீரில் மிதந்தது. பேழை நிலைபெற்ற அரராத் மலைசிகரத்தை இன்றைய துருக்கி வரைபடத்தில் காணலாம்.

வெள்ளம் வடிந்து கொண்டிருக்கும்போது நோவா பேழையிலிருந்து காகம், புறா போன்ற பறவைகளை அனுப்பி வெள்ள நிலைமை பற்றி அறிந்து கொள்கிறார். 3-ம் முறை புறாவை அனுப்பியபோது அது ஒலிவ இலையை கொத்திக் கொண்டு வந்தது. இந்த நிகழ்வின் நினைவாகத்தான் ஒலிவ இலைகளை இன்றும் சமாதானத்தின் சின்னமாகக் கருதி வருகிறோம். வெள்ளம் வடிந்தாலும் கடவுள் சொல்லும்வரை நோவா பேழைக்குள் காத்திருந்தார்.

முதலாம் மாதம் முதலாம் தேதி உலகின் புது துவக்கத்தைக் குறிக்கிறது. வெளிவந்த நோவா செய்த முதல் காரியம் பலிபீடம் கட்டி தேவனுக்கு தகனபலி செலுத்தியதே ஆகும். நோவாவின் தகனபலியினால் தேவனது உள்ளம் மகிழ்ந்தது. நோவாவோடு உடன்படிக்கை செய்கிறார்.

வேதத்தில் மனிதன் இரட்சிப்படைய வேண்டுமென்று பலமுறை தேவன் தமது அன்பையும், பொறுமையையும் வெளிப்படுத்தி தெய்வீக திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். அவ்வப்பொழுது களையெடுப்பதுபோல தீயவர்களை அழித்தாலும்



ஒவ்வொரு முறையும் எஞ்சியிருப்போர் என்ற சிறுகூட்டம் இருக்கும். (ஏசா. 42:6)

## வெள்ளத்திற்குப் பின் பல புது மாற்றங்களுடன் புதுப்பொலிவுடன் காணப்பட்ட உலக நிலை

1. வேதாகம காலப்பிரிவின் மனசாட்சி காலம் முடிவடைந்து மனித ஆளுகையின் காலம் துவங்கியது.
2. பூமியை சபிப்பதில்லை, பூமி ஜலப்பிரவாகத்தினால் அழிப்பதில்லை, சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை என உடன்படிக்கையின் அடையாளமாக வானவில் வைக்கப்பட்டது. 8:21
3. புதிய காலநிலை, புதிய பருவங்களைக் கொண்ட ஆண்டுகள் துவங்கியது. 8:22
4. மிருகங்களின் சுவாபம் மாற்றப்பட்டது. 9:2
5. மாமிசம் உள்ளிட்ட புதிய உணவுமுறை 9:3
6. தேசங்கள் உருவாகின 10:5
7. ஜாதிகள் தோன்றி பிரிந்தன 10:32
8. மாமிசத்தின் உயிர் இரத்தம் என்ற வெளிப்பாடு 10:4
9. இரத்தம் குறித்த கட்டளை
10. பேலேகு காலத்தில் புவி பகுக்கப்பட்டது. 10:25

**8-ம் பக்க தொடர்ச்சி**

11. ஆபிரகாமை முதன்முதலாக அழைத்தபோது அவர் வயது. எண்ணால் எழுதுக. (2)
12. அன்று வரதட்சணை என்று ஒன்றில்லை. மாறாக பெண்ணுக்கும், பெண்வீட்டாருக்கும் சீர்வரிசை உண்டு. மணமகளுக்கு எலியேசர் கொடுத்த பொற்கடகங்களின் எடை (7) கடைசி மூன்று எழுத்துக்கள் ↑
13. ஆண்டவருக்கு அடிபணிபவருக்கு கைபடிந்தவர்கள் உண்டு. விசுவாசியின் தந்தையான எனக்குக் கைபடிந்த எத்தனை பேர் கொண்டு சகோதரனை மீட்டேன்? (10) கடைசி மூன்று எழுத்துக்கள் ↑
15. அந்நிய தேசத்தில் பரதேசியாயிருந்த ஆபிரகாமின் சந்ததியார் ......................... .............யிலே கானான் திரும்புவார்கள். (7)

↑↑↑ 13. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்த வருடங்கள். (7)

14. மாமன் மெச்சிய மருமகள் மாமனிடம் அடையாளமாய் கேட்டபொருட்கள் எத்தனை? (3)
15. ஏதேனிலிருந்து ஓடிய நதி எத்தனை ஆறுகளாகப் பிரிந்தன. (2)

←←← 2. நோவா செய்த பேழையின் அகலம் .................. முழம். (4)

3. அனைத்து உயிரினங்களும் ஒருசேர ஜீவித்த பேழையில் இருந்த மனிதர்களின் எண்ணிக்கை. (3)
8. இரட்டையர்களில் ஒருவனான நான் என் தம்பியை எதிர்கொள்ள எத்தனை நபர்களோடு வந்தேன்? (3)
10. எகிப்துக்குப் போன யாக்கோபின் குடும்பத்தார் எத்தனை பேர்? எண்ணால் எழுதுக. (2)
16. ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷமாம்; அந்த ஏழு கதிர்களும் ஏழு வருஷமாம் சொப்பனம் .................. (3)